2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல 13-வது நிதிக் குழுவிலே இப்போது நிதி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி, துறைக்கு வந்த பிறகு பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

77—

கட்டட வசதி

***109520—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், தொரப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்மூலம் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், தொரப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு நிதி உதவித் திட்டம் பகுதி 10-ல் 17 வகுப்பறைகள், ஒரு மேல்நிலை ஆய்வுக் கூடம், 8 கழிப்பறைகள் மற்றும் 200 மீட்டர் சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள, நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது. நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டதும், மேற்கண்ட பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் பணிகளைப் பொதுப் பணித் துறையின்மூலம் விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தொரப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளி, பக்கத்தில் இருக்கக்கூடிய பல கிராமத்து மாணவர்கள் படிக்கக்கூடிய ஒரு பள்ளியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு போதிய வகுப்பறைகள் இல்லாத காரணத்தாலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நானும், அதேபோல, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் மாண்புமிகு கப்பல் போக்குவரத்துத் துறை மத்திய அமைச்சர் திரு. வாசன் அவர்களும் சில கட்டடங்களைக் கட்டித் தந்திருக்கிறோம். இருந்தாலுங்கூட, அவை போதுமான அளவில் இல்லாத காரணத்தாலே, இன்னும் 20 வகுப்பறைகள் அங்கே கட்ட வேண்டியிருக்கிறது. மற்றும், சுற்றுச் சுவரே இல்லாமல், வரலாற்றுச் சிறப்புமிக்க வேலூர் ஆண்கள் சிறைச்சாலைக்குப் பக்கத்திலேயே அந்தப் பள்ளி இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே, அங்கே சுற்றுச் சுவர் மிக மிக அவசியம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது நபார்டு வங்கியினுடைய நிதி உதவியை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகச் சொன்னார்கள். இதற்கு முன்னுரிமை அளித்து, நடப்பாண்டில் 17 வகுப்பறைகளும், சுற்றுச் சுவரும், 8 கழிவறைகளும் அங்கே கட்டப்படுமா? நிதி எந்த நிலையில், எப்போது கிடைக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மானியக் கோரிக்கையிலே தெரிவித்ததைப்போல, இந்த ஆண்டு நபார்டு திட்டத்தினுடைய உதவியின்கீழ் 259 பள்ளிகளுக்கு ஏறத்தாழ ரூ.229.01 கோடியில் பல்வேறு அடிப்படை வசதிகளைச் செய்வதற்கான முன்மொழிவுகள் அந்த வங்கியிடத்திலே இப்போது இருக்கிறது. இந்த ஆண்டு அவர்கள் கொடுப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள். எனவே, மிக விரைவில் அந்த நிதி நமக்குக் கிடைக்கப்பெறும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், ஏறத்தாழ 47 பள்ளிகளுக்கு 34 கோடி ரூபாய் செலவிலே அதற்கான

2010 ஏப்ரல் 21]

முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு பள்ளி நீங்கள் குறிப்பிட்டிருக்கிற தொரப்பாடி பள்ளி. அங்கே ஏற்கெனவே இப்போது 600 மீட்டர் சுற்றுச் சுவர் இருக்கிறது, இன்னும் 200 மீட்டர் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் இணைத்திருக்கிறோம். 12 வகுப்பறைகள் தேவை என்று கேட்டிருக்கிறார்கள், 17 வகுப்பறைகள் இப்போது அந்த முன்மொழிவிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த முன்மொழிவுகளை அவர்கள் ஏற்றுக்கொள்கிறபோது இந்த ஆண்டிலேயே நிச்சயமாக முன்னுரிமை அளித்து, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஞானசேகரன் அவர்கள் கூறியதுபோல, அந்தப் பணிகளை அரசு நிச்சயமாகத் தொடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி நிதி உதவி அளிக்கக்கூடிய பள்ளிகள் எல்லாம் பெரும்பாலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளாகவோ, உயர்நிலைப் பள்ளிகளாகவோ இருந்து கொண்டிருக்கின்றன. நகராட்சியில் இருக்கக்கூடிய பள்ளிகளும் அரசுப் பள்ளிகள் என்றுதான் அவை இப்போது வகுக்கப்பட்டு அந்த நிலையில்தான் அவற்றை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நகராட்சியிடமோ அல்லது பேரூராட்சிகளிடமோ அதற்கான நிதியே இல்லை. ஆகவே, அப்படியிருக்கக்கூடிய காலக்கட்டத்தில் நகராட்சி எல்லைக்குள் இருக்கக்கூடிய, குறிப்பாக வேலூர் நகராட்சி என்று எடுத்துக்கொண்டாலுங்கூட, அங்கே தோட்டப்பாளையம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அதேபோல சைதாப்பேட்டையில் இருக்கக்கூடிய கே.ஏ.கே.எம்.-- கோடையிடி குப்புசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளி, அதேபோல சலவன்பேட்டையில் இருக்கக்கூடிய நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கஸ்பாவில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியை எல்லாம் எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், கட்டட வசதிகளெல்லாம் இல்லாமல் இருக்கின்றன. நகராட்சியிடம் பணமும் இல்லை. நாங்கள் எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொஞ்சம் நிதிதான் எங்களாலே கொடுக்க முடிகிறது. ஆகவே, நபார்டு அந்தப் பணத்தை நகராட்சி எல்லைக்குள் இருக்கக்கூடிய நகரமைப் பள்ளிகளுக்கும் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

[2010 ஏப்ரல் 21

அதேபோல, என்னுடைய வேலூர் மாவட்டத்தில், நிம்மியம்பட்டு என்கிற கிராமத்தில் இருக்கக்கூடிய ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உருவாக்க வேண்டும் என்று, அங்கு அதற்கான பணத்தையெல்லாம் கட்டிவிட்டு 5 வருடங்களாகக் காத்திருக்கிறார்கள். அந்த நிம்மியம்பட்டு அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவாரா, அதற்கு ஆணையிடுவாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நபார்டு வங்கி இப்போது நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு அத்தகைய நிதி உதவியைச் செய்வதில்லை. காரணம், அந்த வங்கியினுடைய நோக்கம், ஊரகப் பகுதிகளிலே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட அடிப்படை கட்டுமான வசதிகளை மேம்படுத்துவது. சாலைகளை அமைக்கக்கூடிய செயல்களாக இருந்தாலும், ஊரகப் பகுதிகளிலேதான் நிதி உதவி கொடுப்பது என்பதை அந்த வங்கியினுடைய கொள்கையாக வைத்திருக்கிறார்கள். ஆனால், சில இடங்களிலே விதிவிலக்காக, நாம் மிகுந்த அழுத்தம் கொடுத்தோம் என்று சொன்னால்-- உதாரணத்திற்கு முன்னாள் மத்திய அமைச்சர் அண்ணன் டி.ஆர். பாலு அவர்களுடைய தொகுதியாக இருக்கக்கூடிய சென்னை மாநகராட்சிக்குட்பட்டு இருக்கக்கூடிய வேளச்சேரி பகுதியிலே வைக்க வேண்டும் என்று சொன்னபோது, அதற்காக விதிவிலக்கினை நபார்டு வங்கியிடமிருந்து கொஞ்சம் போராட்டத்திற்குப் பிறகுதான் எங்களால் பெற முடிந்தது. அப்படி ஏதாவது குறிப்பிட்ட பள்ளி இருக்கிறது என்று சொன்னால், அதற்கான விதிவிலக்குகளை நபார்டு வங்கிமூலமாகப் பெறுவதற்கு அரசு நிச்சயமாக முயற்சியினை செய்யும். அடுத்து, நிம்மியம்பட்டு பள்ளியைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு மே

2010 ஏப்ரல் 21]

மாதத்திலே உயர்நிலைப் பள்ளிகளுக்கான அடுத்தகட்ட முன்மொழிவுகளை மத்திய அரசுக்கு அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தில் அனுப்புகின்றபோது இதை நிச்சயமாக நாம் இணைத்துக்கொள்ள முடியும். அவர் தொடர்ந்து இதனை வலியுறுத்தியிருக்கிறார். வெட்டுத் தீர்மானத்தில்கூட அதைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பள்ளிக்கும் அரசு முன்னுரிமை அளிக்கும் என்பதை உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியின் சார்பிலே நிதியுதவி பெறும் அரசுப் பள்ளிகளைப்போல, அரசு உதவிபெறும் Aided Schools-க்கும் அந்த வசதிகள் இருக்கின்றனவா? அதற்கான வாய்ப்புகள் ஏதேனும் இருக்கின்றனவா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு நபார்டு வங்கியினுடைய உதவி கோரப்படுவதில்லை. காரணம் அரசுப் பள்ளிகளே நிறைய இருக்கின்றன. பல்வேறு அரசுப் பள்ளிகளுக்கு முதல்கட்டமாக முன்னுரிமை அடிப்படையிலே, நாம் கட்டடப் பணிகளை அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கு நிதியுதவி அதிகமாகச் செய்ய வேண்டிய நிலை இருப்பதனாலே, அரசு நிதியுதவி பெறுகின்ற பள்ளிகளை இப்போது நாம் எடுத்துக்கொள்ளவில்லை. அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகளைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி போன்றவற்றின்மூலமாக அங்கே அடிப்படை வசதிகள் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.